பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 18 (1—7—68) திங்கள் ★ வெளியூர்: ஆனி 19 (2—7—68) செவ்வாய் [இதழ்: 14

தமிழரை அவமதிக்கும் தவறு எப்படி ஏற்பட்டது?

விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, ஜூன் 30—

இலங்கைத் தமிழர்களின் உள்ளங்களைப் புண்படுத்தும் வகையில், இலங்கை அரசின் உலாத் துறை, வெளியிட்டுள்ள விளம்பரத்தை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு உல்லாசப் பயணத் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தவறு எப்படி ஏற்பட்டது என்பதுபற்றி விசாரணை நடத்துமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தென்காசித் தொகுதி வாக்காளர்களே---
சிந்தித்து முடிவு செய்வீர்!

கழக ஆட்சியின் சாதனை இதோ--பதினைந்து மாதப் பட்டியல் பாரீர்!

★

"இருபதாண்டுக்கால ஆட்சியில் காங்கிரசுக் கட்சி புரிந்துள்ள சாதனைகளையும், பதினைந்து மாத காலத்தில் தி. மு. க. புரிந்துள்ள சாதனைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! எங்கள் சாதனைகள் உங்களுக்கு மனநிறைவு அளிக்கவில்லை என்றால் காங்கிரசைத் தூக்கி எறிந்ததைப்போல் எங்களையும் தூக்கியெறியுங்கள்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் தென்காசித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கூறியிருக்கிறார்கள்.

பதினைந்து மாத காலத்தில் கழக ஆட்சி புரிந்துள்ள சாதனைகளில் முக்கியமானவற்றையெல்லாம் தொகுத்துத் துறைவாரியாக 'நம் நாடு' இதழில் வெளியிடப்படுகிறது.

ஏற்கனவே, வேளாண்மை, நீர்ப்பாசனம், கல்வி உணவு ஆகிய துறைகளின் சாதனைகள் வெளியிடப்பட்டன; இங்கு தொழில் -- நிதி -- போக்குவரத்து -- தமிழ் வளர்ச்சி ஆகிய துறைகளின் சாதனைப் பட்டியல் தரப்படுகிறது:—

தொழில் வளர்ச்சி

1966-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களுடன் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்றது; ஐந்தாண்டுத் திட்டங்களில் மத்திய அரசு, மாநில அரசுக்கு ஏராளமான பண உதவியளித்தது; சில தொழிற்சாலைகளைத் தானே துவக்கியது; தற்போது திட்ட காலமல்லாததால், இந்தியா முழுவதும் 'தொழில் மந்தம்' ஏற்பட்டுள்ளது; அவ்விதம் இருந்தும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, மற்ற மாநிலங்களைவிடச் சிறப்பாக உள்ளது.

1. காங்கிரசு ஆட்சியில் மூடப்பட்ட 19 ஆலைகளுக்குத் தமிழக அரசு ரூ 1,10,78,000 பண உதவி அளித்தது.
2. காங்கிரசாட்சியில் மூடப்பட்ட காளீசுவரா ஆலை திறக்கப்படுகிறது.
3. கோவை ஆலைகளின் சிக்கல் தீரத் தமிழக அரசு முயற்சி எடுத்துவருகிறது.
4. சிறு தொழில் துவக்க ஓர் இலட்ச ரூபாய் கொடுத்துவந்த உதவித் தொகை, இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டது.
5. இந்த ஆண்டு மின்சார வெட்டு இல்லை.
6. காங்கிரசாட்சியில் மின்சாரம் மைசூரிலிருந்து யூனிட் 9 காசுக்கு வாங்கப்பட்டது; தறபோது 5 காசுக்கு வாங்குவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.
7. வட ஆற்காட்டில் சோடியம் டைக்ரமேட் தொழிறசாலை ஏற்படுகிறது.
8. 1968 மார்ச்சுவரை தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் துவங்க 97 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன; இதே காலத்தில் ஆந்திரத்தில் 45-தான்; மைசூரில் 52-தான்: கேரளத்தில் 37-தான்.
9. தனியார் துறையில், இந்த ஆண்டு 14 தொழில்கள் தமது உற்பத்தியைத் துவங்கியுள்ளன.
10. கோவை மாவட்டம் தாளவாடியில் வேளாண்மைத் தொழிற் துறைக்காக ரூ. 3 இலட்சம் செலவில் கூட்டுறவுப் பண்ணை அமைக்கப்பட்டது.
11. தூத்துக்குடியில் ஜிப்சத்திலிருந்து பிளாஸ்திரி உற்பத்தித் தொழிற்சாலை துவக்கப்படுகிறது.
12. தூத்துக்குடியில் பொட்டாஷியம் குளோரைடு தொழிற்சாலை துவக்கப்படுகிறது.
13. நிறைவேற்றாது கைவிடப்படவிருந்த தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தை—'எழுச்சி நாள்' கொண்டாடி—மத்திய அரசாங்கத்தை ரூ. 24 கோடி செலவில் நிறைவேற்ற ஏற்பாடு செய்துள்ளது.
14. காங்கிரசு ஆட்சியில் தீபாவளி காலத்தில் கைத்தறித் துணிக்கு சிறப்புத் தள்ளுபடி 8 நாட்கள்தான் கொடுக்கப்பட்டன; கழக ஆட்சியில் 18—10—67 முதல் 1—11—67 வரை—அதாவது 15 நாட்களுக்குக் கொடுக்கப்படுகிறது.
15. நெல்லையில் பர்மா தமிழர்கட்கு நூற்பு ஆலை வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் ஏற்படவிருக்கும் தொழில்களாவன:—

16. ரூ 10 கோடி செலவில் செயற்கை நூல் தயாரிக்கும் தொழில்.
17. மின் குறைவுக் கடத்திகள் தயாரிக்கும் தொழில; மண்வாரிக் கருவிகள் தயாரிக்கும் தொழில்.
18. கரிக் கருப்பு.
19. குழந்தைகள் உணவு.
20. மின் அணு கருவிகள்.
21. கனரகத் தகடுகள்—கொள் கலங்கள்.
22. தொலைபேசிக் கருவிகள்.
23. செறி மணி உர வகைகள் (Concentrated Granular fertilisers).
24. அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்படம்.
25. ஆலங்குளம் சிமெண்டு ஆலை.
26. தர்மபுரியில் சர்க்கரை ஆலை.
27. வட ஆற்காட்டில் இரண்டு சர்க்கரை ஆலைகள்—முதலிய தொழிற்சாலைகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.
28. சேலம் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தத் தமிழக அரசு, மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு துவக்க மறுத்தால் மாநில அரசே துவக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன,
29. பல புதிய தொழிற் பேட்டைகள் கீழ்க்கண்ட ஊர்களில் துவக்கப்பட்டு வருகின்றன—மின் அணுக் கருவிகள் தயாரிக்கும் தொழில், கருவிகள தயாரிக்கும் தொழில், மருந்துகள் தயாரிக்கும் தொழில்—ஆகிய இத்தொழில்களுக்காகத் தனித் தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்காக நடப்பு ஆண்டில் வேலைகள் தொடங்கப்பட்டு உள்ளன.
30. உதகமண்டலத்தில் இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தொழிற்சாலை சார்புள்ள தொழிற் பேட்டை நிறுவப்படுகிறது.
31. இந்த ஆண்டு கடலூரிலும், நாகப்பட்டினத்திலும் தொழிற் பேட்டைகள் நிறுவப்படுகின்றன.
32. எண்ணூர் அனல் மின் நிலையம், மணலி எண்ணெய் துப்புரவுத் தொழிற்சாலை, சென்னை உரத் தயாரிப்புத் தொழிற்சாலை போன்ற திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கித் தேவையான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. இப்பெரிய மூன்று தொழிற்சாலைகளும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் உற்பத்தியைத் துவங்கும்.
33. இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றையும், துணக்கு இரும்புத் தொழிற்சாலை ஒன்றையும், இயந்திரக் கருவித் துணைப் பகுதிகள் தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன.
34. சுமார் 1-கோடியே பத்து இலட்சம் ரூபாய் செலவில் விமானத்தில் காந்த மானியையும், காமா கதிர் ஒளிப் பிரிமானியையும் வைத்து

(2-ம் பக்கம் பார்க்க)

மொரார்ஜியின் தெளிவற்ற குற்றச்சாட்டு

சட்டம்-ஒழுங்கு குலைந்துவிட்டதற்கு சான்று எங்கே?

'சம்பவங்களைச் சுட்டிக்காட்டினால் விசாரித்து நடவடிக்கை எடுக்கத் தயார்'-அண்ணா விளக்கம்

மதுரை, ஜூன் 30--

"தமிழகத்தில் சட்டம்--ஒழுங்கு குலைந்துவிட்டது என்று பொதுவாகக் குற்றஞ்சாட்டுவோர், சட்டம்-ஒழுங்கு குலையும் வகையில் சம்பவம் ஏதேனும் நடந்திருப்பதாகக் குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால், அதைப் பற்றி விசாரித்துத் தக்க விளக்கமளிக்கவும், தேவையானால் என்னையும் -- அரசையும் திருத்திக்கொள்ளவும் ஆயத்தமாக இருக்கிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இராசபாளையத்தில் நடந்த தமிழ்நாடு காங்கிரசு மாநாட்டில் துணைத் தலைமையமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய், தி.மு.க. ஆட்சி மீது குற்றஞ் சாட்டிப் பேசியது பற்றி அண்ணா குறிப்பிடுகையில்,

"அவர் சாட்டிய குற்றச்சாட்டுகளேல்லாம் தெளிவற்றவையாக உள்ளன. அவற்றை வைத்துக்கொண்டு பொதுவான நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது"

என்றார் அண்ணா.

தமிழக முன்னேற்றத்துக்குக் காங்கிரசாரின் முட்டுக்கட்டை!

தென்காசி, ஜூன் 30—

'ரூபாய்க்குப் படி அரிசி போடும் திட்டத்தைச் செயல்படுத்துவதால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதற்கு தமிழக அரசுக்கு உதவி செய்து அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு நிதியுதவி அளிக்க மத்திய அரசு மறுக்கிறது. இந்தத் திட்டத்தால் மாநில அரசுக்குக் கூடுதலாக ரூ. 8 கோடி செலவு ஏற்படுகிறது.

"'குறைந்த விலைகளில் உணவுத் தானியங்களை வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவி செய்யவேண்டும்' என்று இரண்டாவது சம்பளக் குழு செய்துள்ள சிபாரிசு அடிப்படையிலேயே நிதி உதவியைக் கேட்கிறோம். தமிழகத்துக்கு மத்திய அரசு உதவியளிக்காமல் தமிழ்நாடு காங்கிரசுக்காரர்கள் தடுக்கின்றனர்.

"இரசாயன உர விலையை மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது; உணவு உற்பத்தியை அதிகரிக்க விரும்பும் விவசாயிகளின் உற்சாகத்தை இது தடுத்துவிட்டது.

"நூல் மீது செஸ் வரியை மத்திய அரசு உயர்த்தி, அதன் மூலம் மறைமுகமாக நூல் விலையை உயர்த்திவிட்டது; இதனால் ஏராளமான நூல் தேக்கமுற்று ஆலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது--ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துவிட்டனர்!

'இப்போதுள்ளதைவிட மாநில அரசுக்கு அதிக அதிகாரம் இருந்தால், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்மையளிக்கும் வகையில் இரசாயன உரத்துக்கும், நூலுக்கும் விலை நிர்ணயிக்க முடியும்."

--அறிஞர் அண்ணா

(தென்காசி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 18 (1—7—68) திங்கள்

தென்காசித் தொகுதி

வாக்காளர்களே !

உங்கள் தொகுதியின் இடைத் தேர்தல், இத்திங்கள் மூன்றும் நாள் நடைபெற உள்ளது.

உங்கள் வாக்குகளை அன்று பதிவு செய்யப் போகின்றீர்கள்.

உங்கள் ஆதரவைக் காங்கிரசுக் கட்சி வேட்பாளரான **திருமலைக்குமார்** அவர்கள் கோருகின்றார். அவரைப் போன்றே கழக வேட்பாளரான **சம்சுதின்** எனும் **கதிரவன்** அவர்களும், உங்கள் ஆதரவைக் கோருகின்றார்.

காங்கிரசு வேட்பாளராக நிறுத்தப்பட்டு, உங்கள் ஆதரவைக் கோருகின்ற திருமலைக்குமார், அரசியலுக்குப் புதியவர்.

காங்கிரசு வேட்பாளராக வேட்பு மனு கொடுக்கின்ற நாள் வரை, திருமலைக்குமார் அவர்களை நீங்கள் கண்டது கிடையாது — ஏன் — அவர் பெயரைக்கூட நீங்கள் கேள்விப்பட்டதில்லை.

அவர் வேட்பு மனு கொடுத்ததற்குப் பின்னரே, அவர் பெயரை கேட்கின்ற வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

அவரை நேருக்கு நேராகச் சந்திக்கின்ற வாய்ப்பும், சென்ற சில நாட்களாகத்தான் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

கழக வேட்பாளரான கதிரவன் அவர்களுக்கும்—உங்களுக்கும் உள்ள தொடர்பு, அப்படிப்பட்டதல்ல !

'பல ஆண்டுக்காலமாகவே, அரசியல் துறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர் கதிரவன்' என்ற உண்மை உங்களுக்குத் தெரியும்.

பல்லாண்டுக்காலமாக, கதிரவன் அவர்களுக்கும்—உங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது.

கதிரவன் அவர்களின் நல்லியல்புகளை, நீங்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றீர்கள்.

அதிகம் கூறுவானேன் ? கதிரவன், உங்கள் குடும்பப் பிள்ளைகளில் ஒருவர்.

கதிரவன் சார்ந்துள்ள அரசியல் அமைப்பான முன்னேற்றக் கழகம், இன்றையத் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை, ஓராண்டுக்குமுன், கழகத்திடம் மனமுவந்து தமிழக வாக்காளர்கள் ஒப்படைத்துள்ளனர்.

தமிழக ஆட்சியைக் கழகத்திடம் ஒப்படைத்ததனால், சர்வாதிகாரப் பாதையில் தீவிரமாக நடைபோட்டுக் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியை, மேலும் அதே பாதையில் தொடர்ந்து செல்லவிடாமல், தமிழக வாக்காளர்கள் தடுத்து நிறுத்தினர்.

இருபதாண்டுக்காலமாகத் தொடர்ந்தாற்போல் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துகொண்டிருந்த காரணத்தால், 'சனநாயகம்' என்ற புனிதமான சொல்லுக்குரிய பொருளையே மறந்துவிட்டு மக்களாட்சி முறையை உருக்குலைத்துவந்த காங்கிரசுக் கட்சியை, அவ்வழிவு வேலையைக் கைவிட்டுவிட்டு மீண்டும் மறந்துபோன சனநாயகப் பாதைக்குத் திரும்பும்படிச் செய்தனர்—தமிழக வாக்காளர்கள்.

காங்கிரசுக் கட்சி கைக்கொண்டிருந்த சர்வாதிகாரப் போக்கை மாற்றிக்கொண்டு மீண்டும் அதனை சனநாயகப் பாதைக்குத் திரும்பும்படி செய்த தமிழக வாக்காளர்களுடன், சென்ற பொதுத் தேர்தலில் நீங்கள் அறிந்தோ அறியாமலோ பங்கு கொள்ளத் தவறிவிட்டிருக்கின்றீர்கள்.

அப்பொழுது செய்துவிட்ட தவறுக்காக, உள்ளூர நீங்கள் வருந்திக் கொண்டிருக்கின்றீர்கள் என்பது உண்மை.

சனநாயக உணர்வை--சென்ற பொதுத் தேர்தலில்--காங்கிரசுக் கட்சிக்கு ஊட்டிய பெரும்பாலான தொகுதி வாக்காளர்களின் அணியில் உங்களையும் இணைத்துக்கொள்ள இந்த இடைத் தேர்தல், கிடைத்தற்கரிய வாய்ப்பாக இப்பொழுது கிடைத்திருக்கிறது.

இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியை வீழ்த்துவது என்பது, ஒரு கட்சி சர்வாதிகாரத்தை வீழ்த்துவதற்கு ஒப்பாகும்.

இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியை வீழ்த்துவது என்பது, சனநாயக முறைக்கு மேலும் வலிவூட்டுவதாகும்.

இந்த இடைத் தேர்தல் காங்கிரசுக் கட்சியை வீழ்த்துவது என்பது, தன்னைக் கப்பிக்கொண்டிருக்கின்ற கறையைக் கழுவிக் கொள்ளக் காங்கிரசுக் கட்சிக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதாகும்.

இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியை வீழ்த்துவது என்பது, தனது தவறைத் திருத்திக்கொள்ளக் காங்கிரசுக் கட்சியைத் தூண்டுவதாகும்.

தன்னைத் தவிர, நாடாளுவதற்குத் தகுதியுடைய அரசியல் கட்சி தமிழகத்தில் இல்லை என, 'உண்மையை மறைத்துக் கூறி வந்தது அப்பட்டமான பொய்' என்பதை, சென்ற பொதுத் தேர்தலில் பெரும்பாலான தொகுதி வாக்காளர்கள், கழகத்தை ஆதரித்ததன் வாயிலாகக் காங்கிரசுக் கட்சிக்கு உணர்த்திவிட்டனர்.

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் தகுதி காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமல்ல—முன்னேற்றக் கழகத்துக்கும் உண்டு என்ற மகத்தான உண்மையை, பெரும்பாலான தொகுதியினர், சென்ற பொதுத் தேர்தலில் நிலைநாட்டிவிட்டனர்.

'ஆட்சிப் பொறுப்பில் இடம் பெறுவதென்பது, பெரும்பாலான மக்களின் விருப்புக்கும் வெறுப்புக்கும் உட்பட்ட ஒன்று' என்ற உண்மையை, காங்கிரசுக் கட்சி மறந்துவிட்டிருந்தது.

மக்கள் விரும்பினாலும் வெறுத்தாலும், தாங்கள் மட்டுமே ஆட்சிப்பொறுப்பில் என்றென்றைக்கும் இருந்துவர முடியும் என அகம்பாவம் கொண்டிருந்தது காங்கிரசுக் கட்சி !

காங்கிரசுக் கட்சி கொண்டிருந்த அந்த அகம்பாவத்தைப் பெரும்பாலான தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் தவிடுபொடியாக்கிவிட்டனர்—பொதுத் தேர்தலில் !

ஆனால், காங்கிரசுக் கட்சியோ, அந்த அகம்பாவத்திலிருந்து, இன்னும முழு அளவில் விடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை.

அந்த அகம்பாவத்திலிருந்து காங்கிரசுக் கட்சியை விடுவிக்க வேண்டிய கடமை, இப்பொழுது தென்காசித் தொகுதி வாக்காளர்கள்மீது சுமந்திருக்கிறது.

கழகத்துக்கு வாக்களித்து—கழக வேட்பாளரான கதிரவன் அவர்களை வெற்றிபெறச் செய்வதனால், காங்கிரசுக் கட்சியைப் பற்றிக்கொண்டிருக்கின்ற அந்த அகம்பாவம், மேலும் கொஞ்சம் குறைவதற்கு வழி ஏற்படும்.

தன்னைப் பற்றிக்கொண்டிருக்கின்ற 'தான்' என்ற அகம்பாவத்திலிருந்து காங்கிரசுக் கட்சியை விடுவித்தாக வேண்டிய பொறுப்புள்ள கடமை, தென்காசித் தொகுதி வாக்காளர்களைச் சார்ந்ததாகும்.

கழக வேட்பாளரான கதிரவன் வெற்றி, காங்கிரசுக் கட்சியின் அகம்பாவத்தைக் கணிசமாகக் குறைத்திடும்.

கழக வேட்பாளரான கதிரவன் அவர்களுக்கு அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும், காங்கிரசுக் கட்சியைப் புனிதப்படுத்துவதற்கும், அக்கட்சி தன்னுடைய முன்னைய நிலையை மீண்டும் அடைவதற்கும் பெரிதும் துணைபுரியும்.

கழக வேட்பாளரான கதிரவன் அவர்களுக்கே வாக்களியுங்கள் !

கதிரவன் வெற்றி, சனநாயகத்தின் வெற்றி !

—கா. ஐ.

தென்காசித் தொகுதி வாக்காளர்களே---

கழக ஆட்சியின் சாதனை இதோ-பதினைந்து மாதப் பட்டியல் பாரீர்!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிலவியல் நிழற் படம் எடுக்கவும், நிலவியல் கூறுகளை ஆய்வு செய்யவும் திட்டம் தீட்டப்படுகிறது. இதனால் தமிழகத்தின் கனி வளம் முழுவதும் கண்டுபிடிக்கப்படும். இவ்வாராய்ச்சியால் மாநிலத்தின் தொழில்கள் பெருக உதவும். இவ்வாராய்ச்சி தற்பொழுது சேலம் மாவட்டத்தில் நடந்துவருகிறது.

35. எண்ணூரில் அனல் மின் நிலையம் நிறுவும் பணிக்கு இந்த ஆண்டு ரூ. 18-கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
36. கோதையாறு, பரம்பிக்குளம் நீர் மின் திட்டங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டு திட்டங்கள் வேகமாக நடைபெற்றுவருகின்றன.
37. நூற்பு ஆலைகளில் நூல் தேங்கியிருப்பதைத் தடுக்க ஏற்றுமதி செய்யும் நூலுக்கு விற்பனை வரி விலக்களித்துள்ளது. மின்சாரக் கட்டணச் சலுகையும் கொடுக்கப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி

1. மாநில அரசின் எல்லாத் துறைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவர ஏற்பாடுகள் நடக்கின்றன. தமிழ் வளர்ச்சிக்குச் சிறப்பிடம் தரப்பட்டுள்ளது.
2. பள்ளிகளில் இந்தி கற்றுத் தருதல் நிறுத்தப்பட்டு தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டம் கொண்டுவரப்பட்டது.
3. நம்மீது புகுத்தும் இந்தி மொழியை எதிர்த்துப் போராடியதையொட்டித் தொடரப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.
4. தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டப்பட்டது.
5. மாநில அரசின் தலைமைச் செயலகம் (செக்ரட்டேரியட்) இயங்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை முகப்பில், 'தமிழக அரசு—தலைமைச் செயலகம்' எனத் தமிழில் மின் விளக்குகளால் பெயர்ப் பலகை பொருத்தப்பட்டது.
6. அமைச்சர் அலுவலகங்களில், அமைச்சர்களின் பெயர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டன.
7. தமிழக வானொலி நிலையங்களில், 'ஆகாஷ் வாணி' என்பதற்குப் பதில், 'வானொலி' என ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.
8. கல்லூரிகளில் ஐந்தாண்டுகளுக்குள் தமிழ் பயிற்சி மொழியாக வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.
9. நம்மீது புகுத்தப்படும் இந்தி மொழியின் சொற்கள் உள்ள என். சி. சி. பயிற்சி நிறுத்தப்பட்டது.
10. அரசியல் சட்டத்தில் தேசீய மொழிகளாக ஏற்கப்பட்ட 14-மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்குமாறு தமிழகச் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.
11. திருவள்ளுவர் நாளைப் பொது விடுமுறையாக அறிவித்தது.
12. அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் உருவப் படம் வைக்கவும் குறட் பாக்களை எழுதி வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.
13. மத்திய அரசையும் திருவள்ளுவர் நாளைப் பொது விடுமுறையாக்கும்படிச் செய்தது.
14. தமிழ்ச் சுவை சில :—

முன்பு வழங்கிய சொற்களும்		தற்போது வழங்கும் சொற்களும்
சத்யமேவ ஜயதே	—	வாய்மையே வெல்லும்
ஸ்ரீ	—	திரு
ஸ்ரீமதி	—	திருமதி
குமாரி	—	செல்வி
போலீஸ் ஸ்டேஷன்	—	காவல் நிலையம்
அதமன்கோட்டை	—	அதியமான் கோட்டை
பாரிஸ் கார்னர்	—	பாரி முனை
கெல்லீஸ் கார்னர்	—	கிள்ளியூர்
சீ ஷோர் எஸ்டேட்	—	பட்டினப்பாக்கம்

15. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு பெருஞ் சிறப்போடு நடைபெறத் தமிழக அரசு—தி. மு. க. அரசு உதவியது.

போக்குவரத்துத் துறை

1. எழுபத்தைந்து மைலுக்கு மேற்பட்ட தனியார் பஸ் தடங்களை அரசே எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.
2. சென்னை நகர பஸ்களில் கட்டணச் சீரமைப்பு செய்யப்பட்டிருக்கின்றது.
3. எக்ஸ்பிரஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டதால் போக்குவரத்தின் வருமானம் ரூ. 63 இலட்சம் அதிகரித்தது.
4. பழைய அரசாங்க பஸ்களைக் காங்கிரசு அரசாங்கம் செய்ததுபோல் ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்கு விற்காமல், தற்போது காங்கிரசுக்காரர்களாகிய திரு. காசிராமன், திரு. இராமசாமி முதலியோர் அடங்கிய குழு, பஸ் ஏலம் விடுவதைக் கவனிக்கும்.
5. 106 வழித் தடங்களில் 250 பஸ்கள் தேசியமயத் திட்டத்தின்கீழ் புதிதாக விடப்பட்டிருக்கின்றன.
6. முன்பு 4 ஆண்டு பயன்படுத்திய டயரை தற்போது 5 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
7. தனியார் பஸ்களில் இதுவரை மைலுக்கு 3 காசு வாங்கிவந்தது—கழக அரசின் முயற்சியால் $2\frac{1}{2}$ காசாகக் குறைக்கப்பட்டது.
8. பார்வை இழந்தோரும், கால் ஊனமானோரும், சென்னை நகர பஸ்களில் மருத்துவ விடுதிக்கு இலவசமாகச் செல்லலாம்.
9. அரசு பஸ்களில் வானொலிப் பெட்டியை இலவசமாக எடுத்துச் செல்லலாம்.
10. 1966—67-ல் அரசின் பஸ் தொழிலில் இழப்பு ரூ. 61 இலட்சம்; கழக ஆட்சியில் முதல் ஆண்டில் இந்த இழப்பு 35 இலட்சமாகக் குறைந்தது.
11. அரசு பஸ்களில் கைத்தறி மூட்டைகள் எடுத்துச் செல்லக் கட்டணம் குறைக்கப்பட்டது.
12. கண்டக்டர், டிரைவர் வேலைகளுக்கு உயர் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. இதனால் விபத்துக்கள் குறையும்.
13. இரவு நேர 'எக்ஸ்பிரஸ்' விடப்பட்டது.
14. பஸ் தொழிலாளர்களுக்கு, கதர்த் துணிக்குப் பதில்—தொழிலாளர்களின் முறையீட்டின் பேரில்—கைத்தறித் துணி வழங்கப்பட்டது. இதனால் ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் மீதமாகிறது
15. திருச்சி, மதுரை, கோவை முதலிய நகரங்களில் உள்ள வாடகைக் கார்களில் டாக்சி மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன.
16. ஸ்டாண்டர்டு, பியட் வண்டிகளில் முன்பு மூவர்தான் ஏறலாம் என்பது—தற்பொழுது நால்வராகவும், முன்பு நால்வராக இருந்த

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

பணக்கார நோய்கள் !

டெல்லி ஆய்வு கூறும் தகவல்

புதுடில்லி ஜூன் 29—

கூடுதலான வருமானம் உடையவர்களுக்கே இரத்தக் கொதிப்பு, இருதயக் கோளாறு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன என்பது டெல்லியில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் மூலம் தெரியவருகிறது.

டாக்டர் எஸ். சி. சீல் என்பவர் இந்த ஆய்வை நடத்தினார்.

ரூ. 2,000-மும் அதற்கு மேலும் மாத வருமானமுள்ள 10 குடும்பங்களில் குறைந்தது 4 குடும்பங்களாவது இத்தகைய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

ரூ. 1,500 முதல் ரூ. 2,000 வரை மாத வருமானமுள்ள 10 குடும்பங்களில் 3 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ரூ. 1,000-த்துக்குமேல் வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பரவலாக இரத்த அழுத்த நோய், இருதயக் கோளாறு, நீரிழிவு, புற்றுநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் 47.7 சதவிகிதம் முதல் 52.9 சதவிகிதத்தினர் வரை இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழிகாரக் காங்கிரசுக் கட்சிக்கா மீண்டும் ஓட்டு?

ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே குரலான கழகத்தையே ஆதரிப்பீர்!

அணிகலன் தொழிலாளர் சங்கச் செயலாளர் வேண்டுகோள்

சென்னை, சூன் 30—

தென்னக அணிகலன் தொழிலாளர் சங்கச் செயலாளர் த. சேதுராசன், தென்காசி இடைத் தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரிக்கும் வகையில் விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியிருப்பதாவது :—

"தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்மூலம் நமது வாழ்வையே பாழாக்கிப் பரதவிக்கவிட்டது—காங்கிரசு ஆட்சி! 'மறுவாழ்வு' என்ற பெயரால் கொடுக்கப்பட்டிருக்கின்ற சிறு, சிறு கடனுதவி பணத்தையும் வசூலிக்க, வாரண்டு, ஜப்தி போன்ற கெடுபிடிகளைக் கட்டவிழ்த்துவிட்டு, நகைத் தொழிலாளர்களை வேதனைக்குள்ளாக்கியது—காங்கிரசு ஆட்சி!

'சான்றிதழ் பெற்றுத்தான் தொழில் செய்யவேண்டும்' என்ற கொடுமையினை நிரந்தரமாக்கி, வம்சா வழியினரது தொழில் நுட்ப அறிவையே கெடுத்து நாசமாக்கி விட்டிருக்கிறது—காங்கிரசு ஆட்சி!

தமிழகத்தில் காங்கிரசு ஆட்சியை ஒழித்து மக்களின் நலம் பேணும் கழக ஆட்சி கண்டதில் அணிகலத் தொழிலாளர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே குரலான கழகம், பதவி ஏற்ற பின், நமது நியாயமான குறைபாடுகளைக் களையும் வகையிலேயே நடவடிக்கைகள் மேற்கொண்டுவருவதை மகிழ்ச்சியுடன் கவனித்து வருகிறோம்.

நகைத் தொழிலாளர்கள் மீது ஏவி விடப்பட்டிருந்த 'ஜப்தி—வாரண்டு' அதிகாரிகளின் கெடுபிடிகள் அனைத்தும் தளர்த்தப்பட்டிருக்கின்றன!

தவணைமுறைகளில் பணம் கட்ட வசதி அளித்தும், 'மறுவாழ்வுக்காகக் கொடுத்த பணத்தை நிவாரண நிதியாக்கி பணம் வசூலிப்பதை ரத்து செய்ய வேண்டும்' என்று மத்திய அரசிடம் போராடியும் வருகிறது—கழக ஆட்சி!

வீட்டு மனை, பயிரிட நிலம், கல்வி—தொழில் வசதிகள் போன்ற பல நன்மைகளை, தி. மு. கழகம் ஆட்சி பொறுப்பேற்ற காலத்திலிருந்து நகைத் தொழிலாளர்கள் அடுத்தடுத்து பெற்று வருகிறார்கள்.

தி. மு. கழக ஆட்சி வலுப்பெற்று நிலைத்து நின்று செயலாற்ற நகைத் தொழிலாளர் அனைவரும் உறுதுணையாக இருந்து வருகிறோம் என்பதனை அறிந்தும், தென்காசி இடைத் தேர்தலில் தி. மு. கழகத்துடன் போட்டியிடும் காங்கிரசுக் கட்சி, நம்மிடையேயும் ஓட்டு வேட்டையாட ஆரம்பித்திருக்கிறது.

நமது வாழ்வையே பறித்து—தற்கொலைகளுக்குஆளாக்கி—ஜீவாதார உரிமையையும் பறித்துவிட்டு—நம்மிடம் எந்த முகத்தோடு காங்கிரசுக் கட்சி ஓட்டுக் கேட்க வருகிறது என்பதுதான் வியப்பும் வேதனையுமாகும்!

உலகத் தமிழர் மாநாட்டின்மூலம் நமது பாரம்பரியக் கலைப் பெருமைகளை மீண்டும் உலகறியச் செய்தது—கழக அரசு!

நமது தொழில் நுட்பங்களை அறிந்து, அதற்கான வழிகளில் நம்மை ஈடுபாடு கொள்ளச் செய்வதில் முன்னின்று செயலாற்றுவது—கழக அரசு!

இந்த ஆட்சியின் மாட்சியையும், வலிவையும், மேலும் பெருக்கிக் காட்டுவது ந[illegible] தலையாய கடமையாகும். சங்ககிரித் தேர்தலில் நாம் அளித்த ஆதரவைப் போலவே தென்காசித் தேர்தலிலும் கழக வேட்பாளருக்கு ஆதரவு நல்கி, கழகம் பெரும் வெற்றிபெறப் பாடுபட வேண்டும்.

வடகாசியின் வாடை தமிழகத்தைப் பீடிக்காத வகையில், தென்காசி பொதிகைமலைத் தென்றல் அறிஞர் அண்ணா அவர்களின் கரம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதை அணிகலத் தொழிலாளர் ஒவ்வொருவரும் இலட்சியமாகக் கொண்டு சூலை 3-ஆம் நாள் வரை செயல்பட வேண்டும்.

கழக வேட்பாளர் கதிரவன் வெற்றி எல்லா சமூகத்தினராலும் இன்று உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அணிகலத் தொழிலாளர் சமூகமும் கழக வெற்றிக்கு அயராது பாடுபடும் என்பதும் உறுதியாகிவிட்டது.

"தென்காசித் தொகுதி நகைத் தொழிலாளர் அனைவரும் கழக வெற்றிக்காகக் குடும்பம் குடும்பமாகச் சென்று உதயசூரியனுக்கு வாக்களித்தும்—வாக்களிக்கச் செய்தும், நம்மைப் பாழாக்கிய காங்கிரசைத் தோல்வியுறச் செய்தல் வேண்டும்" என்று நகை தொழிலாளர் சமுதாய பெருங்குடி மக்களை விருப்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்."

தி. மு. கழக ஆட்சியில் பெற்ற பலன்

'உதயசூரியன் கொடி' மீண்டும் ஈவோஜிமாவில்!

போரில் இழந்த தீவை ஜப்பான் பெற்றுவிட்டது

டோக்கியோ, சூன் 29—

போனின் தீவுகளை, அமெரிக்கா, அதிகாரபூர்வமாக ஜப்பானிடம் திருப்பிக் கொடுத்தது. இந்த அதிகார மாற்றத்தைக் கொண்டாட டோக்கியோவிலும், சிச்சிஜிமா தீவிலும் விழாக்கள் நடைபெற்றன. போனின் தீவுக் கூட்டத்தில் மிகப் பெரியது, சிச்சிஜிமா.

பசிபிக் பெருங்கடலில் உள்ள போனின் தீவுக் கூட்டம் ஏறக்குறைய 30 சிறு சிறு தீவுகள் கொண்டதாகும். இத்தீவுகளில் ஒன்றுதான் ஈவோஜிமா.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் போனின் தீவுகள், அமெரிக்காவின் நிர்வாகத்தில் இருந்து வந்தது.

போனின் தீவுகள் திரும்பக் கிடைத்ததை ஜப்பானியப் பத்திரிகைகள் வரவேற்றுள்ளன; 'போனின் தீவுகளில் மீண்டும் உதயசூரியன் கொடி (ஜப்பானின் கொடி) பறப்பது குறித்துப் பாராட்ட வேண்டியது மிக உண்டு' என்று தலையங்கம் தீட்டியது—டோக்கியோ பத்திரிகை 'யோமியூரி'.

தமிழர் சமுதாயம் மறக்க முடியாது

சா. கணேசன் விளக்கம்

தென்காசி, சூன் 28—

"இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சி இல்லையானால், இந்தியைத் தடை செய்திருக்க முடியாது! தமிழ்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் தமிழர் சமுதாயத்திற்கு தி.மு.க. ஆட்சி ஒன்றே போதும்! இந்தி இங்கே வந்துவிட்டால் நாம் மூன்றுந்தர மக்களாகிவிடுவோம்! அப்படி இந்தி வருமானால் உத்தரப் பிரதேசம்தான் நம்மை ஆட்சி செய்யும்!

"நமக்கு இரு மொழிக் கொள்கை வர தி.மு.க. ஆட்சிதான் காரணமாகும்"

என்று, தமிழக சுதந்தராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் கூறினார். தென்காசி அமீதியா திடலில் பீர்முகம்மது எம்.எல்.ஏ. தலைமையில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது :—

"பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட காங்கிரசை இடைத்தேர்தலில் வெற்றி பெறவிட்டால் பெரும் தீங்கு ஏற்படும்! எனவே, கண்டிப்பாய்த் தோற்கடித்தே தீர வேண்டும்!

"இந்த இடைத்தேர்தல், எதிர்பாராமல் ஏற்பட்டது; இதை நாம் சாதாரணமாகக் கருதிவிடக் கூடாது; மிகமிக முக்கியமானது; இந்தியா முழுவதும் இந்தத் தேர்தல் முடிவை எதிர்பார்க்கிறது! ஆகவே, பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட காங்கிரசை, இடைத்தேர்தலிலும் தோற்கடித்தே ஆகவேண்டும்!

"தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்து தர இருக்கிறார். ஆகவே, தி.மு.க. வேட்பாளர் கதிரவனை வெற்றி பெறச் செய்யவேண்டியது நம் ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகிறது."

இக்கூட்டத்தில் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி. அவர்களும் பேசினார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அம்பாசிடர் காரில் ஐவராகவும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

17. பஸ்களைப் பயன்படுத்தும் காலமும் உயர்த்தப்பட்டது; '5 ஆண்டுகள் பயன்படுத்தினால் போதும்' என்று இருந்த பென்ஸ், லேலாண்டு வண்டிகளைப் பொறுத்தவரையில் தற்பொழுது 6 ஆண்டுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
18. புதிதாக ஏராளமான பஸ் ரூட்கள் ஏற்படுத்தப்பட்டு புதிய பஸ்கள் விடப்படுவதால் மக்களுக்குப் போக்குவரத்து வசதி கிடைக்கிறது.
19. அரசுப் போக்குவரத்தில் 1964-ல் வேலை நிறுத்தம் செய்ததற்காக 11 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்கு 1967 மே மாதத்திலிருந்து வேலை கொடுக்கப்பட்டது.
20. 10 மணி நேர வேலை 8-மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.
21. பஸ் தொழிலாளர் சங்கத்திற்கு அலுவலகம் கட்ட இடம் கொடுக்கப்பட்டது.
22. கடந்த ஓராண்டில் பஸ் தொழிலாளர்களுக்கு வசதி செய்வதற்காக ரூ. 37 இலட்சம் அதிகம் கொடுக்கப்பட்டது.
23. 1—11—67 முதல் பஞ்சப் படி உயர்த்தப்பட்டது.
24. நகர ஈட்டுப் படி புதிதாக வழங்கப்படுகிறது.
25. டெப்போக்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ஊக்க போனசு 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது.
26. 'பஸ் பாடி' கட்டும் பிரிவிலுள்ள தொழிலாளர்களின் ஊக்க போனசு 20 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக ஒதுக்கப்பட்டது.
27. குரோம்பேட்டை தொழிலாளர்களுக்கு, 'அட்டெண்டன்சு போனசு' கொடுக்கப்படுகிறது.
28. பயிற்சி பெறும் தொழிலாளர்களுக்கு ரூ 10 அதிகம் கொடுக்கப்படுகிறது.
29. தையற்கூலி ரூ. 10-லிருந்து ரூ. 12-ஆக உயர்த்தப்பட்டது.
30. குளிர்ப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்குக் குளிர்காலப் படி உயர்த்தப்பட்டது.
31. 'ஒர்க் ஷாப்'பில் இரவில் பணிபுரிவோருக்கு 10 காசு படி அதிகம் கொடுக்கப்படுகிறது.
32. பதவி உயர்வு இருந்தும் அளிக்கப்படாமல் இருந்த தொழிலாளர்களுக்கு 1964-லிருந்து பதவி உயர்வு அளிக்கப்படுகிறது
33. தொழிலாளர் கல்வித் திட்ட ஆசிரியர்கள் ஒரு நாளைக்கு 50 காசு படி கேட்டபோது, அது, ஒரு ரூபாயாகத் தரப்படுகிறது.
34. இரண்டாண்டுக்கு ஒருமுறை கொடுக்கப்பட்டுவந்த ஒரு செட் பூட்ஸ், இப்போது ஆண்டுக்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறது.
35. டிரைவர் பயிற்சி பெறுவோருக்குத் தையற்கூலி, சலவைப் படி, பூட்ஸ் கொடுக்கப்படுகின்றன.
36. துயர் தணிப்புக் கருணை நிதி, ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டது.
37. நகர ஈட்டுப் படி—அம்பத்தூர், குரோம்பேட்டை, மதுரை முதலிய இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.
38. நாட் கூலித் தொழிலாளர்களுக்கும் நகர ஈட்டுப் படி வழங்கப்படுகிறது.
39. வீட்டு வசதித் திட்டத்தின்படி வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.
40. சிறிய தண்டனை பெற்றவர்களுக்கு 'அட்டெண்டன்சு போனசு' தரப்படுகிறது.

நிதித் துறை

1. 1967—68-ல் மத்திய அரசு ரூ 43½-கோடி: தருவதாகக் கூறி ரூ. 38-கோடிதான் கொடுத்தது; இந்நிலையிலும் புதிய வரிகள் விதிக்கப்படவில்லை.
2. புன்செய் நிலங்களுக்கு நில வரி நீக்கப்பட்டது.
3. ஏற்றுமதி செய்யப்படும் நூலுக்கு விற்பனை வரி விலக்கு உண்டு. மின்சாரக் கட்டணச் சலுகையும் கொடுக்கப்படுகிறது.
4. படி அரிசித் திட்டத்திற்குச் சுமார் ரூ. 5-கோடி செலவு செய்யப்படுகிறது.
5. பர்மா, இலங்கை அகதிகளின் மறுவாழ்விற்குத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.
6. 1967 நவம்பர் முதல் நாளிலிருந்து பஞ்சப் படியை உயர்த்தி சென்னை நகர அலுவலர்க்கு நகர ஈட்டுப் படியும் வழங்கப்பட்டது.
7. இந்த நகர ஈட்டுப் படி தற்பொழுது மதுரைக்கும், மற்றும் சென்னையின் புறநகர்ப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.
8. அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்து மாதம் ரூ. 500 மட்டுமே பெறுகின்றனர்.
9. முதல் மாதச் சம்பளத்தை, தீத் துயர் தணிப்பு நிதிக்கு வழங்கினர்.
10. ஆண்டிற்கு ரூ. 20-கோடி இழப்பைக் கொடுக்கும் மதுவிலக்குக் கொள்கையைக் கடைபிடிக்கின்றனர்.
11. சொந்தக் கார்கள் உள்ள அமைச்சர்கள், புதிதாக அரசினர் கார்களை வாங்கவில்லை.
12. சென்னையில் சொந்த வீடு உள்ள அமைச்சர்கள் அரசாங்கப் பங்களாவைப் பெறவில்லை.
13. காங்கிரசு ஆட்சியினர் ரிசர்வ் பாங்கியில் பெற்றிருந்த அதிகப் பற்றுகிய ரூ. 4 கோடியை அடைத்தனர்.
14. பயனற்ற பல பதவிகளை நீக்கிவிட்டுச் சிக்கனத்தை மேற்கொண்டனர்.
15. பனை வெல்லத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
16. விற்பனை வரிவிலக்கு வரம்பு ரூ. 10,000-த்திலிருந்து ரூ. 15,000-ஆக உயர்த்தப்படுகிறது.
17. பொரி, அவல் ஆகியவற்றிற்கு விற்பனை வரி இல்லை.
18. 1968 சூன் முதல் நாளிலிருந்து இரண்டாவது முறையாக பஞ்சப் படி, மத்திய அரசு ஊழியர்களின அளவுக்கு உயர்த்தப்பட்டது.
19. 1968—69-ல் புதிய வரிகள் ஏதும் விதிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு மத்திய அரசு சுமார் ரூ. 280 கோடி அளவிற்கு புதிய வரிகள் விதித்தது.

—தொகுத்தவர்: மு. இளங்கோ

உணவுத் தானியத்தை ஏற்றிச் செல்லவும் வசதி இல்லையாம்

இரயில்வேயின் போக்கால் அரியானாவில் கோதுமைதேக்கம்

சண்டிகர், சூன் 29—

மத்தியப் பிரதேசம் நீங்கலாக இதர மாநிலங்களுக்கு அரியானாவிலிருந்து கோதுமையை ஏற்றிச் செல்வதை இரயில்வே நிறுத்திவிட்டது.

கோதுமையை இறக்குவதற்குத் தொழிலாளர்கள் பற்றுக்குறையும், கோதுமையை இறக்க வேண்டிய இடங்களில் போதிய இட வசதி இல்லாமல் உள்ளதுமே இதற்குக் காரணம் என்று இங்கு அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது.

இதர மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்காக அரியானாவில் பல இரயில் நிலையங்களில் 38,000 டன் வரை கோதுமை தேங்கி கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

மகாராட்டிரம், மேற்கு வங்கம், பீகார் மாநிலங்களுக்கும், டில்லிக்கும் கோதுமையைக் கொண்டு செல்வதை இரயில்வே அடியோடு நிறுத்திவிட்டது.

சில நாட்களுக்கு முன்பு அரியானா அரசு, டில்லிக்கு 2,000 டன் கோதுமையை அனுப்பியது; அங்கு கோதுமையை இறக்குவதற்கு ஆள் பற்றுககுறை நிலைமை ஏற்பட்டுள்ளதால் அந்தச் சரக்கு ஆமதாபாத்துக்குத் திருப்பிவிடப்பட்டது.

திருச்சி 28-வது வட்ட அறிஞர் அண்ணா மன்றம்

20—6—68-ல், திருச்சி 28-வது வட்ட அறிஞர் அண்ணா மன்றம் நிர்வாகிகள் தேர்தல், தோழர்கள் அக்பர் சரீப் தலைமையிலும்—டி. எம். மீரான் முன்னிலையிலும் நடைபெற்றது; அதுபோது, ஜே. அப்துல் மஜீத் செயலாளராகவும், ஈ. முகம்மது அனீபா துணைச் செயலாளராகவும், பி. ஷேக் மைதீன் பொருளாளராகவும், மற்றும் பத்து பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சட்டம்--அமைதி குலைந்தது எங்கே?

காவல்துறையினர் சுதந்தரமாகவே செயல்படுகின்றனர்

அரசியல் நோக்கத்தோடு கிளப்பப்படும் புகார்--அதிகாரி மறுப்பு

மதுரை, சூன் 30—

"தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் முறிந்துவிட்டதாக அரசியல் நோக்கத்துடன் கூறப்படுகிறது.

"மாநிலத்தின் எந்தப் பகுதியிலும், சட்டம்—ஒழுங்கு சிறிதும் நிலைகுலையவில்லை.

"'போலீசுத் துறை நிர்வாகம், சுதந்தரமாக நடைபெறுகிறது' என்பதற்கு என்னால் உறுதியளிக்க முடியும். மாநிலத்தில், சட்டம்—ஒழுங்கைக் காப்பதற்கு எங்கள் முறைப்படி நடப்பதற்கு எங்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

"சட்டம்—ஒழுங்கைக் காக்கவும், அமைதியை ஏற்படுத்தவும் வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போதெல்லாம் போலீசுத் துறை, எந்த நிலைமையையும் எதிர்பாராமல் சிறப்புமிக்க பணியாற்றி வந்திருக்கிறது"

என்று, போலீசு இன்ஸ்பெக்டர்–ஜெனரல் ஆர். எம். மகாதேவன் அவர்கள், இங்கு நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்.

"தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் முறிந்துகொண்டிருப்பதாகச் 'சில அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்துகொண்டிருப்பதால்' இதனை விளக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

"சென்னை நகரில் பஸ் தொழிலாளர்கள்— மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்கள்; சென்னை நகரில் ஏற்பட்ட தீ விபத்துக்கள்; சென்னை நகரின் சுற்றுப் பகுதிகளில் நடைபெற்ற சில திருட்டுக்கள் — ஆகியவை காரணமாக அறிக்கை ஒன்று வெளியிட நேரிட்டிருக்கிறது' என்று கூறி, அறிக்கை ஒன்றை அவர், செய்தியாளர்களிடம் அளித்தார்.

அந்த அறிக்கையில் அவர் விளக்கியிருப்பதாவது:—

"1968-ம் ஆண்டின் முதல் 6-மாதங்களில், போலீசார் செய்துள்ள பணிகள், அளவிலும் திறமையிலும் முன்னைய ஆண்டுகளைவிடச் சிறிதும் குறையவில்லை என்பது புள்ளிவிவரங்களிலிருந்து நன்கு புலப்படும்.

"'போலீசார் கையைக் கட்டிக் கொண்டிருக்கின்றனர்' எனச் சொல்லப்படும் பிரசாரம், சிறிதும் உண்மையல்ல; அவர்கள், மிகத் திறமையுடன் பணியாற்றி வருகின்றனர். அவர்களுடைய முயற்சிக்குப் பொதுமக்கள் சிறிது ஊக்கமளித்தால், அவர்களுக்கு மேலும் பலம் ஏற்படும்; அதற்கு மாறாக, போலீசுத் துறைக்கு எதிராக இடைவிடாமல் பிரசாரம் செய்துகொண்டிருப்பது விரும்பத்தக்க ஒன்றல்ல!

"நினைத்தபோதெல்லாம் நடத்தப்படும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் போலீசார் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. இவை, அன்றாடச் சம்பவங்களாகிவிட்டன. இவற்றையெல்லாம் கண்காணிப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும் போலீசுத் துறையின் நேரம் விரயமாகிறது. இதனையெல்லாம் தவிர்த்தால், சமூகத்திற்கு இன்னும் அதிகமான பணிகளைப் போலீசுத் துறை ஆற்ற இயலும்.

வேலைநிறுத்தங்களில் அமைதி காப்பு

வேலை நிறுத்தங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

'தொழிற்சாலைகளில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், சதவடைப்புச் சம்பந்தமாகச் சில மாதங்களில் போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி எவரும் குறைகூற முடியாது.

"சென்னை நகரின் சுற்றுப்புறங்களிலும், கோவையிலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டபோது, சட்டத்தையும் அமைதியையும் போலீசார், திறமையாகப் பாதுகாத்து வந்திருக்கின்றனர்.

"எந்த நிலைமையிலும், சட்டத்தையும் அமைதியையும் போலீசுத் துறை பாதுகாக்க முடியும் என்பது இதிலிருந்து நன்கு தெரியவரும்."

தீயிடும் தீயவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி

சென்னை நகரில் ஏற்படுவரும் தீ விபத்துக்களைப்பற்றி அவர் கூறியிருப்பதாவது:—

"இந்த விபத்துக்கள் சென்ற ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் அதிர்ச்சியை ஏற்படுத்திவருகின்றன. சிறப்பாகத் துப்பறியும் திறமைமிக்க ஒரு குழுவினர், இந்தத் தீ விபத்துக்களைப்பற்றிப் புலன் விசாரணை நடத்திவருகின்றனர்; அவர்களுடைய முயற்சி வெற்றிபெறும் என்று நம்புகிறேன்."

★

கூடுதல் போலீசாரை சேர்ப்பதற்குத் திட்டம்

தமிழக அரசு அனுமதி

"கூடுதலாக 16½ பிளாடூன்கள் (படைகள்) போலீசாரைச் சேர்ப்பதற்கான திட்டத்தை மாநில அரசு அனுமதித்திருக்கிறது"

என்ற தகவலை, இன்ஸ்பெக்டர்–ஜெனரல் தெரிவித்தார். இதுபற்றி அவர் விளக்கியதாவது:—

"கூடுதல் போலீசுப் படைகளைச் சேர்க்கும் திட்டம் பல ஆண்டுகளாகவே அரசின் பரிசீலனையில் இருந்துவந்தது.

"கூடுதல் படையை அனுமதித்ததன்மூலம், போலீசுத் துறையின் சங்கடங்களை அரசு உணர்ந்திருப்பது நன்கு தெரிகிறது.

"மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சப்-டிவிஷனும், ஒவ்வொரு மாவட்டத் தலைமை அலுவலகமும் 'ரேடியோ' மூலம் இணைக்கப்பட வேண்டும் என அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

"செங்கற்பட்டு மாவட்டப் போலீசுப் பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கு அண்மையில் அனுமதித்திருப்பதும், கூடுதல் போலீசுப் படைகளை அனுமதித்திருப்பதும் நகருக்கு வெளியேயுள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் சிறந்த கண்காணிப்புக்கு வழிகோலும்."

மூன்று அமைச்சரவைகள் வீழ்ச்சியடைந்ததன் எதிரொலி

குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் பீகார் கொண்டுவரப்பட்டது

மாநில ஆளுநரின் சிபாரிசை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டதற்குக் காரணம்?

புதுடில்லி, சூன் 30—

பொதுத் தேர்தலுக்குப்பின், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவரும் நான்காவது மாநிலமாக பீகார் உருவாகியிருக்கிறது.

அரியானாவில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பின், இடைத் தேர்தல் நடைபெற்று புதிய அமைச்சரவை பதவியேற்றுவிட்டது.

மேற்கு வங்கத்திலும், உத்தரப் பிரதேசத்திலும் குடியரசுத் தலைவர் ஆட்சி நீடித்துவருகிறது.

கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்த பீகாரில் அமைச்சரவை கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநில ஆளுநர் நித்தியானந்த கனுங்கோ செய்த சிபாரிசினை மத்திய அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

"அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி, மாநிலத்தின் நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது" என்ற ஆளுநரின் மதிப்பீட்டை மத்திய அமைச்சரவை முற்றிலும் ஒப்புக் கொண்டது.

"கட்சி மாறுதல் பெரும் அளவுக்கு மாநிலத்தில் இருப்பதால், எந்தக் கட்சியும் நிலையான அரசை ஏற்படுத்துவதற்கில்லை" என்ற ஆளுநரின் கருத்தையும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

அரசியல் சட்டம் 358-வது பிரிவின்கீழ் பீகார் சட்டமன்றத்தைக் கலைத்தும், மாநில அரசின் அலுவல்கள்—அதிகாரங்கள் அனைத்தையும் ஏற்றும் குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்தார்.

பொதுத்தேர்தலுக்குப்பின், பீகாரில் 15 மாத காலத்துக்குள் மூன்று அமைச்சரவைகள் அடுத்தடுத்து வீழ்ச்சியடைந்துள்ளன; எனவே, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுவதை மத்திய அமைச்சரவை ஆதரித்ததற்கு அது ஒரு காரணமாகிவிட்டது.

சட்டமன்றத்தின் 84 உறுப்பினர்கள், அடிக்கடி கட்சி மாறியுள்ளனர்.

கட்சித் தலைவர்கள் சிலர், நெருக்கடியின்போது, பலமுறை தங்களுடைய கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஜனதா கட்சித் தலைவர் இராம்கார் இராஜா, 24-மணி நேரத்துக்குள் மூன்று தடவை மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய காரணங்களால், ஆளுநரின் சிபாரிசை மத்திய அமைச்சரவை ஏற்ற வேண்டியதாகிவிட்டதாம்.

தேர்தல் எப்போது?

இடைத் தேர்தல் நடத்துவது பற்றியும் மத்திய அமைச்சரவை விவாதித்தது.

"உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார் ஆகிய மூன்று மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் (அடுத்த பிப்ரவரியில்) இடைத் தேர்தல் நடத்துவதுதான் நலன் மிக்கது--சிக்கனமானது" என அமைச்சரவை கருதியதாம்.

செங்கற்பட்டு மாவட்டத் தலைநகர் மாற்றம்

நிகழ்ச்சிகள்பற்றி கலெக்டர் விளக்கம்

மக்கள் குறைகள் கேட்டறியவும் ஏற்பாடுகள்

மதுராந்தகம், சூன் 30—

சூலை 1-ம் நாளிலிருந்து செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்படுகிறது.

போலீசுத் துறையைப் பொறுத்தமட்டில் செங்கற்பட்டு மாவட்டம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. காஞ்சிபுரம் கிழக்குப் பகுதிக்கு ஒரு போலீசு சூப்பரிண்டெண்டும், செங்கற்பட்டு மேற்குப் பகுதிக்கு ஒரு போலீசு சூப்பரிண்டெண்டும் இருப்பார்.

இந்தத் தகவலை, மாவட்ட கலெக்டர், செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

சூலை 1-ம் நாள்முதல் கலெக்டர் அலுவலகம், சூப்பரிண்டெண்டு அலுவலகம் ஆகியவை காஞ்சிபுரத்தில் இயங்கும்.

மற்றப்படி, சூன் 6-ம் நாளன்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையின்கீழ் வருவாய்த் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், கலெக்டர் அலுவலகத்தைத் திறந்துவைப்பார்.

பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, புதிய கலெக்டர் அலுவலகக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டுவார்.

சிப்பந்திகள் குடியிருப்பு வீடுகளுக்குச் சட்ட அமைச்சர் செ. மாதவன் அடிக்கல் நாட்டுவார்.

6-ம் நாள் மாலை 5-மணிக்கு ரிசர்வ் போலீசார் அணிவகுப்பை முதலமைச்சர் ஏற்றுக்கொள்வதோடு, கிராமநலக் கண்காட்சி ஒன்றையும் திறந்துவைப்பார்.

கண்காட்சி 6-ம் நாள் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வாரகாலம் நடைபெறும்.

கண்காட்சி நடக்கும் நாட்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நாள்தோறும் ஒவ்வொரு அமைச்சர் கண்காட்சியின் விழாவுக்குத் தலைமை வகிப்பர்.

சென்னைக்கு அருகில் உள்ள சைதாப்பேட்டை, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி தாலுகா மக்களின் நலனையொட்டி வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் காலை 10-மணியிலிருந்து பிற்பகல் 1-மணிவரையில் கலெக்டர், சைதாப்பேட்டை பனகல் கட்டிடத்தில், பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிவார்.

மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி சனிக்கிழமைகளிலும், மாவட்ட சப்ளை அதிகாரி புதன், சனிக்கிழமைகளிலும் சைதாப்பேட்டைக்கு வந்து, பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிவர்.

சென்னைச் சுற்றுப்புறக் குடும்பக் கார்டுகள், மற்ற பிரச்சினைகள் பற்றிக் கவனிக்க இப்போதுள்ள கலெக்டர் அலுவலகத்திலேயே ஒரு பிரிவில் ஒரு தனித் தாசில்தாரின்கீழ் இரண்டு டெபுடி தாசில்தார்கள் உள்ள அலுவலகம் இயங்கும்.

மாவட்ட கலெக்டர், மாதத்தில் முதல் வாரத்தில்—புதன், வியாழக்கிழமைகளில், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி தாலுகாக்களில் முகாமிட்டு குறைகளைக் கேட்டறிவார்.

6-ந் தேதி மாலை நடைபெறும் துவக்க விழாவில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், காஞ்சிபுரம் நகராட்சிப் பள்ளிக் குழந்தைகளுக்கு சிலேட்—புத்தகங்கள் அளிப்பதுடன், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பட்டாக்களும் வழங்குவார். அந்தப் பட்டாக்கள் அளிப்பு ஒரு வாரகாலம் நாள்தோறும் பல்வேறு அமைச்சர்கள் அளிப்பர்.

சென்னையிலிருந்து தொடர்ந்து காஞ்சிபுரம் வரும் சில கலெக்டர் அலுவலகச் சிப்பந்திகளின் வசதிக்காக நாள்தோறும் இரயில் சீசன் டிக்கெட் சலுகைக் கட்டணத்திலேயே அரசாங்க பஸ் ஒன்றைக் காஞ்சிபுரத்துக்குவிட அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது."

கல்வி -- தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

சூலை 2 மாலை 4-30 மணி: சாரம் (திண்டிவனம் அருகில்)—ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியக் கால்கோள் விழா; மாலை 5-30 மணி: திண்டிவனம்—நகராட்சி காய்கறி அங்காடித் திறப்பு; 6-30 மணி: வெண்மணியாத்தூர்—உயர் துவக்கப் பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டுவிழா; 8-மணி: விழுப்புரம்—பொதுக்கூட்டம்.

வேளாண்மைத்துறை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

சூலை 2 மாலை 4-30 மணி: சாரம்—ஊராட்சி ஒன்றியக் கட்டிடத் திறப்பு விழா; மாலை 5-30 மணி: விவசாயக் கிடங்கு கட்டிடத் திறப்புவிழா.

சூலை 3 காலை 8 மணி: கண்டமானடி — உயர்நிலைப் பள்ளித் திறப்புவிழா; 9 மணி: விழுப்புரம்—பயணிர் விடுதித் திறப்பு விழா; 10-30 மணி: கலைக் கல்லூரி திறப்புவிழா; மாலை 4-30 மணி: கடலூர்—சூப்பர் மார்க்கெட் திறப்புவிழா; 5-30 மணி: நூற்றுண்டு விழாக் கட்டிடத் திறப்புவிழா; 6-30 மணி: விளையாட்டு அரங்க அடிக்கல் நாட்டு விழா.

முருகு பாண்டியன்

பலகுரல் நிகழ்ச்சி

சூலை 2: குமாரமங்கலம்; 3: அம்மாசத்திரம் (குடந்தை); 4: வீரியன்கோட்டை; 5: திருச்சி; 6: திருவானைக்காவல்; 7: திருச்சி; 8: அந்தநல்லூர்; 9: எடமலைப்பட்டிபுதூர்; 11: மாயூரம்; 12: மயூரம்–மணல்மேடு (விவசாய மாநாடு); 13: சேப்பாநத்தம்; 14: மந்தாரக்குப்பம்; 15: கடலூர்; 16: செட்டிபட்டி, 17: காட்டேரிகுப்பம் (புதுவை): 18: கீழமாத்தூர்; 21: திருவாரூர்; 22, 23, 24: குளித்தலைத் தொகுதி; 25: மதுரை; 26: சித்துவார்பட்டி; 27, 28: கன்னியாகுமரி; 29: விருதுநகர்; 30: தோப்புத்துறை (செம்போடை).

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. NO. 118331 ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.